# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 06.09.2019 (பிற்பகல்)**

**விசாரணை நடைபெற்ற இடம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு**

**முன்னிலை**

**திரு ச.த.தமிழ்குமார் பி.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண். SA9923/D/2018**

திரு.C.பெரியசாமி ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ செயல் அலுவலர்,
கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
கொடுமுடி பேரூராட்சி, கொடுமுடி - 638 151.
ஈரோடு மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

•••••••••••••

**ஆணை**

இன்று (06.09.2019) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.C.பெரியசாமி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.மு.விஜயநாத், பொதுத் தகவல் அலுவலர்/ செயல் அலுவலர், கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம், கொடுமுடி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(3)-ன் கீழ் 27.12.2018 அன்று தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 16.07.2018 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 20.08.2018 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

3. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 16.07.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், கொடுமுடி பேரூராட்சி, வார்டு எண்.8ல் ஒட்டர் தெருவில் புகளூரான் வாய்க்கால் ஓரமாக அமைந்துள்ள திருமதி.திரிபுரசுந்தரி அவர்களுக்கு சொந்தமான திருமண மண்டபம் குறித்த தகவல்கள், கொடுமுடி பேரூராட்சி வார்டு எண்.8-ல் ஐயப்பன் கோவில் தெரு கோடியில் புகளூரான வாய்க்கால் கரையில் அமைந்துள்ள திரு.சாவித்திரி சரவணன் அவர்களுக்கு சொந்தமான மினி திருமண மஹால் பற்றிய தகவல்கள், கொடுமுடி பேரூராட்சி வார்டு எண்.8-ல், கோவில் தெருவில் அமைந்துள்ள திருமதி.திரிபுரசுந்தரி சரவணன் அவர்கள் புதிதாக கட்டியுள்ள S.T.லாட்ஜ் பற்றிய தகவல்கள், கொடுமுடி பேரூராட்சி வார்டு எண்.9-ல், காவல் கடைத்தெரு, அமைந்துள்ள அ/மி காமாட்டியம்மன் கோவில் திருமண மண்டபம் பற்றிய தகவல்கள், என்பன போன்ற விபரங்களையும் அவை சம்மந்தப்பட்ட தகவல்களையும் 7 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

4. பொதுத் தகவல் அலுவலர் 16.08.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2F-ன்படி கேள்வி வடிவில் உள்ளதால் வழங்க இயலாது என மறுத்துள்ளார் என தெரிவித்து, 20.08.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் 12.10.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் மூன்றாம் நபர் தகவல் என்பதால் வழங்க வழிவகை இல்லை என மறுத்துள்ளார் என தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 27.12.2018 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான சரியான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தை கேட்டுள்ளார். அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர், தனக்கு தகவல்கள் மட்டும் வழங்கினால் போதும் ஆவணங்களின் நகல்கள் வழங்கத் தேவையில்லை என ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2F-ன்படி மேல்முறையீட்டாளர் கேள்வி வடிவில் தகவல்கள் கோரியுள்ளதால் வழங்க இயலாது என ஆணையத்திடம் தெரிவித்தார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு விரிவான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:

1. மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் அனைத்தும் வழங்கக்கூடிய தகவல்களே எனவே. அவற்றை முழுமையாகவும், விரிவாகவும் வழங்கவேண்டும் என பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

2. மேல்முறையீட்டாளர் 16.07.2018 தேதியிட்டு கோரும் தகவல்களை **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு விரிவான தகவல்களை அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத்**

தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு இவ்வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

(ஒம்/-) (ச.த. தமிழ்குமார்)
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA9923/D/2018**

**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/ செயல் அலுவலர்,
கொடுமுடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
கொடுமுடி பேரூராட்சி, கொடுமுடி . 638 151.
ஈரோடு மாவட்டம்.

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**
திரு.C.பெரியசாமி,
திருநீலகண்டர் மண்டப சத்திரம்,
எண்.24, கிழக்கு அக்ரஹாரம்,
கொடுமுடி - 638 151. ஈரோடு மாவட்டம்.

Copy to: Judgement File.
Spare/ SM-PC-19/09/2019